ඩබිඳු සාමූහිකය
Dabindu Collective
வியர்வை துளிகளின் கூட்டமைப்பு

Reg. No. G A 659

2026.01.11
செய்தி இயக்குநர்/ ஆசிரியர்,
மின்னணு மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கு,

கணம் செய்தி இயக்குநர்/ ஆசிரியர் அவர்களுக்கு,

செய்தி அறிக்கை

டாபிந்து குழும அமைப்பை தவறாக பிரதிநிதித்துவப்படுத்தியதை நிராகரிக்கும் அறிக்கை

2026 ஜனவரி 08 ஆந் திகதி இலங்கை பாராளுமன்றத்தில், ஐக்கிய மக்கள் கூட்டணி (SJB) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிரி ஜயசேகர அவர்கள், பாராளுமன்றத்தில் ஆற்றிய சிறப்பு உரையில் எங்கள் அமைப்பான டபிந்து குழுமம், அதன் நோக்கம் மற்றும் நிதி ஆதாரங்களை பொய்யாகவும் பொறுப்பற்ற முறையிலும் தவறாக பிரதிநிதித்துவப்படுத்தி வெளியிட்டிருந்த அறிக்கையை டாபிந்து குழுமம் முழுமையாக நிராகரிக்கிறது.

டாபிந்து குழுமம் கடந்த 41 ஆண்டுகளாக சட்டப்படி மற்றும் வெளிப்படையாக, பெண் தொழிலாளர்களின் உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக சுரண்டல், பாகுபாடு மற்றும் சமத்துவமின்மையை எதிர்கொள்ளும் பெண்களுக்கு நாங்கள் முக்கியத்துவம் அளித்து செயற்படுகிறோம். எங்கள் பணிகள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு, தேசிய தொழிலாளர் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை தரநிலைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
டாபிந்து குழுமம் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டுமே சேவை செய்யும் அமைப்பாக செயல்படுகிறது என்ற பொய்யான மற்றும் அவதூறான குற்றச்சாட்டை நாங்கள் முழுமையாக நிராகரிக்கிறோம். இத்தகைய கூற்றுகள் திட்டமிட்ட முறையில் தவறான தகவல்களை பரப்புவதுடன், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அரசியலமைப்புச் கொள்கையை பாதிக்கின்றன.

மேலும், எங்கள் நிதி ஆதாரங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தவறான கூற்றுகளையும் நாங்கள் கடுமையாக நிராகரிக்கிறோம். Grassrooted Trust, Think Equal மற்றும் Grassrooted Fund ஆகியவற்றின் மூலம் நிதி பெற்றதாகக் கூறப்பட்டவை தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளன. டாபிந்து குழுமம் பெற்ற அனைத்து நிதி உதவிகளும் இலங்கை சட்டங்களுக்கு முழுமையாக இணங்க, சட்டபூர்வமாகவும் வெளிப்படையாகவும் பெறப்பட்டவையே. நிதி அறிக்கைகள் மற்றும் நன்கொடையாளர்கள் தொடர்பான சட்டப்பூர்வ வெளிப்படுத்தல்கள் அனைத்தும் பின்பற்றப்பட்டுள்ளன. ஆதாரமின்றி பாராளுமன்றத்தில் நன்கொடையாளர்களின் பெயர்களை குறிப்பிடுவது சிவில் சமூக அமைப்புகளின் சட்டப்பூர்வத்தன்மையை மதிப்பிளக்க செய்ய முயலும் செயற்பாடாகும்.

எங்கள் நோக்கம் அல்லது நிதி தொடர்பாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்காக பாராளுமன்ற சிறப்பு உரிமையை பயன்படுத்துவது, அந்த உரிமைக்கான தவறான பயன்பாடாகும். பாராளுமன்ற சிறப்பு உரிமை என்பது சட்டமன்ற விவாதங்களை பாதுகாப்பதற்காக வழங்கப்பட்டது. தவறான தகவல்களை பரப்பவும், மனித உரிமை அமைப்புகளை இலக்கு வைக்கவும் அல்ல. இந்த உரிமையை பயன்படுத்தி பொறுப்பை தவிர்க்கவும், பாகுபாட்டை தூண்டவும், சிவில் சமூக அமைப்புகளை அச்சுறுத்தவும் முடியாது. சிவில் சமூக அமைப்புகள் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. சட்டபூர்வமான நிதி

Address : Dabindu Collective, 221, Welabada Road, Katunayake, Sri Lanka
Email :dabindu.infoco@gmail.com Tel : 0114851383 / 0777259892

ஆதாரங்களை பொதுவெளியில் சந்தேகத்திற்குரியதாக மாற்றுவது, ஜனநாயக மற்றும் சிவில் உரிமைக்கான இடத்தை குறைப்பதுடன் சுதந்திரங்களை அச்சுறுத்துகிறது.

பல தேசிய நெருக்கடிகளின் போதும் டாபிந்து குழுமம் தனது பணியை தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது. COVID-19 தொற்று காலத்தில் தனிமைப்படுத்தல் செயல்முறைகளின் போது நிகழ்ந்த கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் தனிமைப்படுத்தல் முகாம்களில் தொழிலாளர்கள் சந்தித்த துன்புறுத்தல்கள் குறித்தான விடயங்களை டாபிந்து குழுமம் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வரும்போது எங்கள் ஊழியர்கள் மீது நேரடி அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. அத்தகைய கடினமான சூழலில், சிவில் சமூக அமைப்புகளின் ஒற்றுமை மனித உரிமை பாதுகாவலர்களைக் காக்க முக்கிய பங்கு வகித்தது. இன்றும், நியாயம், சமத்துவம் மற்றும் பெண் தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக செயல்படும் அமைப்புகளுடன் ஒற்றுமையாக நிற்பது சிவில் சமூகத்தின் பொறுப்பாகும்.

இலங்கை, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிக்கும் ஒப்பந்தம் (CEDAW), ILO ஒப்பந்தங்கள், மற்றும் ஐக்கிய நாடு சபையின் மனித உரிமைகள் அறிவிப்பு போன்ற சர்வதேச கருவிகளின் கீழ் கட்டாயப் பொறுப்புகளை கொண்டுள்ளது. இவை மனித உரிமைகளை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் அமைப்புகள் நிதி வளங்களை தேடி பெறவும், அதனை பயன்படுத்தவும் உரிமைக்கொண்டுள்ளதனை தெளிவாக அங்கீகரிக்கின்றன. சட்டபூர்வமான சிவில் சமூகம் நிதி பெறுதலை அவமதிக்க முயற்சிப்பது இந்தப் பொறுப்புகளுக்கு முரணாகும் மற்றும் ஜனநாயக பொறுப்புக்கூறலை பலவீனப்படுத்துகிறது.

மனித உரிமை பணிகளை நெறிமுறை தவறல், ஊழல் அல்லது நிதி சந்தேகம் ஆகியவற்றுடன் குழப்பமாக இணைப்பது மனித உரிமை பாதுகாப்பாளர்களை சங்கடத்துக்கு உள்ளாக்கும் அபாயகரமான முன்னுதாரணத்தை உருவாக்கி, சட்ட ஆட்சியை தளர்த்துகிறது.

இதன்படி, டாபிந்து குழுமம் கோருவது:

1. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தவறான அறிக்கைகள் உடனடியாக திரும்ப பெறப்பட வேண்டும்.
2. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான இலக்கு வைப்பும், அச்சுறுத்தலும், தவறான பிரதிநிதித்துவமும் நிறுத்தப்பட வேண்டும்.
3. அரசியலமைப்பு சுதந்திரங்களையும் சிவில் சமூக இடத்தையும் பாதுகாப்பதற்கான தனது அர்ப்பணிப்பை பாராளுமன்றம் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும்.

நியாயம், சமத்துவம் மற்றும் ஜனநாயக மதிப்புகளை பாதுகாக்க பாராளுமன்ற உறுப்பினர்கள், வலையமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஜனநாயக நிறுவனங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம்.

டாபிந்து குழுமம் அரசியலமைப்பு ஜனநாயகம், தொழிலாளர் நீதி, பாலின சமத்துவம் மற்றும் அடிப்படை உரிமைகள் மீது கொண்ட உறுதிப்பாட்டை தொடர்ந்தும் நிலைநிறுத்தும்.

கடந்த நான்கு தசாப்தங்களாக செயற்பட்டதுபோலவே, அச்சமின்றி எங்கள் பணியை தொடர்வோம்.

நன்றி,
உண்மையுடன்



பி.கே.சமிலா துஷாரி
நிர்வாக தலைவர்

Address : Dabindu Collective, 221, Welabada Road, Katunayake, Sri Lanka
Email :dabindu.infoco@gmail.com Tel : 0114851383 / 0777259892